ஆகவும், விரிவாக்கப்பட்ட மருத்துவ வசதிக்கு ரூ. 60-லிருந்து ரூ. 67 ஆகவும், முழு மருத்துவ வசதிக்கு ரூ. 70லிருந்து ரூ. 80 ஆகவும் உச்ச வரம்பினை தற்பொழுது உயர்த்துவது என்று தொழிலாளர் ஈட்டுறுதி கழகம் முடிவு எடுத்துள்ளது. இருந்தாலும், அதைப்பற்றி அதிகாரப் பூர்வமான அறிக்கை வரவில்லை. விரைவில் அந்த அறிக்கை ஈட்டுறுதிக் கழக சார்பில் வந்து சேருமென்று நம்புகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

MR. CHAIRMAN : I have received messages from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1973 and the Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1973, as passed by the Legislative Assembly.

(2) பேரவையிலிருந்து செய்தி.

MR. CHAIRMAN : I have also received messages from the Deputy Speaker, Legislative Assembly, transmitting copies of the Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1973 (L.A. Bill No. 9 of 1973) and the Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1973 (L. A. Bill No. 10 of 1973), as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bills are Money Bills within the meaning of Artcle 199 of the Constitution of India.

(3) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 3.30 p.m. today, the following further programme of business has been decided :

30—3—1973 (Friday)	... ...	1. Reply by the Hon. the Chief Minister to the Debate on Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1973 ; and 2. Consideration of other Official Bills.
31—3—1973 (Saturday)	... ...	Consideration of Official Bills.
1—4—1973 (Sunday)	... ...	Holiday
2—4—1973 (Monday)	... ...	Consideration of Official Bills.

The Council will meet on 3rd April 1973, if necessary. The Council will meet from 4 p.m. to 7 p.m. daily.

3. கவன ஈர்ப்பு.

விக் இந்தியா தொழிற்சாலையில் தொழிலாளர்கள் சம்பளம் வாங்காத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது குறித்து.

திரு. காட்டூர் கோபால் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனின் ஓர் அங்கமாகிய விக் இந்தியா தொழிற்சாலையில் தொழிலாளர்கள் சம்பளம் வாங்காத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது குறித்தும், இது குறித்து மத்திய அரசினரை வலியுறுத்தி வழிவகை கண்டிட வேண்டும் என்பது குறித்தும்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, விக் இந்தியா தொழிலாளர் சங்கம் கீழ்க்கண்ட மூன்று கோரிக்கைகளை எழுப்பியுள்ளது:—

1. சம்பளம், பஞ்சப்படி மாற்றம் உள்பட பொதுக் கோரிக்கைகள்.

2. உடன்பாடு ஏற்படும்வரை தொழிலாளர்களுக்கு ரூ. 50 தற்காலிக நிவாரணம் அளித்தல்.

3. கோரிக்கைகளின் மீது தீர்வு காணும்வரை விழா முன்பணம் பிடித்தத்தை ஒத்திப்போடுதல்.